ALPHA MIND POWER
# NEWSLETTER
JUNE 2019



## From Guruji's desk....

My Dear Alpha Siddha,

There was a very interesting query from one of our Alpha Siddhas. I wish to share this thought with you. She wrote an email to me that when she wanted her brother to accompany her to a movie and he was not willing, she spoke to his subconscious mind and finally he went with her.

Later, she started wondering whether what she did was right. If he had not gone to the movie with her, he would have spent time at the library. Did she divert him from a better activity? Is it right to create changes in a person's mind just because we want it?

She was totally confused and was regretting what she had done. Many of you also might have encountered such feelings. When we speak to the subconscious mind of another person in Alpha, it is because we wish to create some positive change in that person. This technique is used only when you find it difficult to speak to the person directly but you are very much convinced that this change is needed.

If you take the example of a mother talking to the subconscious mind of her child, pushing him to study well, there can be no two opinions about it. She really wants it and so does it with her whole heart.

If you take a woman talking to the subconscious mind of her husband asking him to show more love to her, she is totally convinced about what she wants. So, there is no doubt.

Take the example of a person talking to the subconscious mind of his boss, asking him to recognize his work and give him a raise or promotion. Again, there is no doubt in his mind that he wants it.

If you have a doubt whether what you are doing is right or wrong, then stop yourself and examine your thoughts and intentions. What exactly are you attempting to do? Do you really want this change happening in the other person's mind? If the answer is a powerful yes, then go ahead without ahead without any hesitation. But if you feel even a small pinch of guilt that you are manipulating somebody for your selfish needs, stop yourself.



You should talk to the subconscious mind of a person, only when you are totally convinced that some positive change is required in that person's mind. This technique is very useful particularly when you do not have the opportunity or courage to speak directly to a person.

Having said the above, I must reiterate here that when you talk to the subconscious mind of a person, you are putting forth your thoughts to that person without speaking directly to him. He may not be aware that you are doing this. His subconscious receives the message and makes him think. However, remember, even after receiving the message from you, it is his free will to decide whether to change or not. Hence, if you do this with conviction, you do not have to feel guilty.

Whenever you talk to somebody's subconscious mind, conclude by saying 'This is beneficial to both of us'. This will relieve you of any feeling of guilt. It will also stop you from using the technique with any negative intentions.

Alpha level is a powerful state of mind. Use it to make your life and the lives of your near and dear ones better and better....

Blessings,

***Srimatha***

### *Rishikesh Camp With Guruji*

***22.09.2019 to 02.10.2019***

**BADRINATH :** 23.09.2019 to 25.09.2019 (3 days)

**SHANTAGNI** : 27.09.2019 to 01.10.2019 (5days)
Reprogram your mind -
Residential Retreat at Ashram

You can attend either one or both the programs.
Eligibility is Alpha Level 1

For further enquiries please contact AMP office: +919841272146



***Guruji with Alpha Siddhas at Srividya Class at Chennai on 18.05.2019***

என் அன்பான ஆல்ஃபா சித்தரே,

நமது ஆல்ஃபா சித்தர் ஒருவரிடமிருந்து மிக சுவாரஸ்யமான கேள்வி ஒன்று வந்தது. அதை பற்றி எழுத நினைக்கிறேன். அவர் எனக்கு எழுதிய இமெயிலில் தனது சகோதரனை படம் பார்க்க கூட வரும்படி அழைத்த பொழுது அவர் முதலில் மறுத்தார். பின்னர் இவர் தனது சகோதரனின் ஆழ் மனதுடன் பேசியதும் அவர் சம்மதித்து இருவரும் படத்திற்கு சென்று வந்தனர்.

அதன் பிறகு இவர் மனதில் ஒரு நெருடல். நாம் செய்தது சரிதானா? தன்னுடன் படத்துக்கு வராமல் இருந்தால் சகோதரன் நூலகத்துக்கு சென்று புத்தகம் படித்திருப்பான். ஒரு நல்ல விஷயத்தை செய்ய விடாமல் அவன் மனதை திசை திருப்பி விட்டோமோ? நமக்கு வேண்டும் என்ற ஒரே காரணத்தினால் ஒருவரது மனதில் மாற்றத்தை உண்டாக்குவது சரிதானா?

மிகுந்த குழப்பத்துடன் தான் செய்ததை நினைத்து வருந்தினார். உங்களில் பலர் கூட சில சந்தர்ப்பங்களில் இப்படி உணர்ந்திருக்கலாம். ஆல்ஃபா நிலையில் ஒருவரது ஆழ்மனதுடன் நாம் பேசுகிறோம் என்றால் அவர் மனதில் ஒரு நல்ல மாற்றத்தை கொண்டு வர முயற்சிக்கிறோம் என்று அர்த்தம். அந்த மனிதருடன் நேரில் பேச முடியவில்லை ஆனால் இந்த மாற்றம் தேவை என்று நிச்சயமாக நீங்கள் நம்பும் பொழுது தான் இந்த முறையை பயன்படுத்தவேண்டும்.

தனது குழந்தை மேலும் சிறப்பாக படிக்க வேண்டும் என்று ஒரு தாய் அதன் ஆழ்மனதுடன் பேசினால், அதில் இரு கருத்துக்களுக்கு இடம் இல்லை. அதனால் முழு மனதுடன் செய்கிறார்.

மனைவி கணவரது ஆழ்மனதுடன் பேசி தன்னிடம் அன்பு காட்டுமாறு கேட்கும் பொழுது அதில் எந்த சந்தேகமும் இன்றி செய்கிறார்.

ஒருவர் தனது மேலதிகாரியுடன் பேசுகிறார். தனது வேலைத் திறனை அங்கீகரித்து தனக்கு பதவு உயர்வு கொடுக்குமாறு கேட்கிறார். அவருக்கும் அதில் எந்த சந்தேகமும் இல்லாததால் முழு மனதோடு பேசுகிறார். நீங்கள் செய்வது சரியா இல்லையா என்ற எண்ணம் உங்கள் மனதில் தோன்றினால், சற்று நிதானித்து உங்கள் எண்ணங்களை கவனியுங்கள். என்ன செய்ய முயல்கிறீர்கள்? இந்த மாற்றம் அந்த மனிதரிடம் ஏற்பட வேண்டும் என்று உண்மையாகவே விரும்புகிறீர்களா? பதில் “ஆம்” என்று தெளிவாக வந்தால், தயக்கமின்றி தியானத்தை தொடருங்கள். ஆனால் உங்கள் மனதில் எங்கேனும் ஒரு மூலையில் நமது சுயநலத்திற்காக ஒருவர் மனதை திசை திருப்புகிறோமே என்று ஒரு சிறிய நெருடல் இருந்தால் கூட உடனே நிறுத்திக் கொள்ளுங்கள்.

ஒருவர் மனதில் ஒரு குறிப்பிட்ட நல்ல மாற்றம் நிச்சயம் தேவை என்று தோன்றினால் மட்டுமே அவரது ஆழ்மனதுடன் பேச வேண்டும். இந்த செய்முறை ஒருவருடன் நேராக பேச சந்தர்ப்பம் இல்லை அல்லது தைரியம் இல்லை எனும் பொழுது மிகவும் உதவியாக இருக்கும்.

மேற்சொன்னவை ஒரு புறம் இருக்க, ஒன்றை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். ஒருவரது ஆழ்மனதுடன் பேசும் பொழுது நேரில் சொல்ல முடியாத விஷயத்தை அவரிடம் கொண்டு செல்கிறீர்கள். அவருக்கு நீங்கள் செய்வது புரியாமல் இருக்கலாம். அவரது ஆழ்மனம் உங்களது செய்தியை பெற்று அவரை சிந்திக்க வைக்கும். ஆனால், ஒன்றை நினைவில் கொள்ளுங்கள். உங்கள் செய்தி அவரிடம் சென்று சேர்ந்தாலும் மாறுவதா இல்லையா என்பதை அவரது மனம் தான் சுதந்திரத்துடன் முடிவு செய்யும். ஆக, முழு மனதோடு இதனை செய்தால் உங்களுக்கு எந்த குற்ற உணர்வும் தேவையில்லை.

எப்பொழுதும் ஒருவருடைய ஆழ்மனதுடன் பேசி முடிக்கும் பொழுது “இது நம் இருவருக்கும் நன்மை பயக்கும்” என்று கூறி முடியுங்கள். இதனால் உங்கள் மனதில் குற்ற உணர்வு தோன்றுவதை தவிர்க்க முடியும். அது மட்டுமின்றி இப்படி ஒரு நல்ல வழிமுறையை தீய எண்ணத்துடன் செய்வதையும் தவிர்த்து விடும்.

ஆல்ஃபா நிலை மிகவும் சக்தி வாய்ந்த நிலை. அதை உங்கள் வாழ்வும் உங்களை சேர்ந்தவர்கள் வாழ்வும் சிறக்க பயன்படுத்துங்கள்...

ஆசீர்வாதங்கள்,

ஸ்ரீமாதா

**குருஜியுடன் ரிஷிகேஷ் முகாம்**

**22.09.2019 முதல் 02.10.2019**

**பத்ரிநாத்**: 23.09.2019 - 25.09.2019 ( 3 நாட்கள்)

**சாந்தக்னி**:27.09.2019 - 01.10.2019 ( 5 நாட்கள்)

மனதை தூய்மைபடுத்து - ஆசிரமத்தில் நடக்கும் வகுப்பு

நீங்கள் ஒன்று அல்லது இரு நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்ளலாம்

**தகுதி :** ஆல்ஃபா கட்டம் 1

விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும் : +919841272146



***Guruji with Alpha Siddhas at Aishwaryam Class at Chennai on 19.05.2019***

Our relative's 3 years old child was suffering a lot from wheezing at 2.00am. They could not take the child to a hospital at that hour. They desperately called me. I did Alpha Meditation for half an hour for the child. Within one hour the child's wheezing disappeared and he slept peacefully. This was possible only because of Alpha. Thanks to Alpha! ***Radhakrishnan***




என்னுடைய உறவினரின் 3 வயது குழந்தைக்கு இரவு 2 மணியளவில் சளியினால் மூச்சுத் திணறல் ஏற்பட்டு மிகவும் சிரமப்படுவதாக போன் வந்தது. அந்த நேரத்தில் பக்கத்தில் எந்த மருத்துவமனைக்கும் செல்ல முடியவில்லை. நான் ஆல்ஃபா தியானத்தின் மூலம் தொடர்ந்து அரைமணி நேரம் "ஆல்ஃபா சக்தி" அனுப்பிக் கொண்டே இருந்தேன். அடுத்த ஒரு மணி நேரத்தில் குழந்தை மூச்சுத் திணறலின்றி நிம்மதியாக தூங்குவதாக தகவல் வந்தது. ஆல்ஃபா மைண்ட் பவர் பயிற்சியை கற்றுத் தந்த குருஜிக்கு எங்கள் நன்றி!

**இராதாகிருஷ்ணன்**

I started Alpha classes last year. Till then I always had some health problem. My mind was also confused about many things. I had no particular direction in life. But after Alpha, my mind became very clear. My health also improved. Then I did Tejas Chakra. With the Cell Glow meditation and Chakra meditation, I could feel so many changes. The Past Life Healing and the Pithru Dosha removal meditation have completely changed my life. Today I am an empowered person Thanks to Alpha and Guruji. ***Aswathy***

கடந்த வருடம் ஆல்ஃபா கட்டம் 1-ல் கலந்து கொண்டேன். எனக்கு உடல் நலம் பாதிப்பு தொடர்ந்து இருந்தது. மனதிலும் எப்பொழுதும் குழப்பம். திசை தெரியாமல் போய்க் கொண்டிருந்த என் வாழ்க்கைக்கு ஆல்ஃபா ஒரு சிறந்த வழிகாட்டியாக அமைந்தது. எனது ஆரோக்கியமும் முன்னேறியது. பின்பு தேஜஸ் சக்ரா தியானத்தில், செல் ஒளி மற்றும் சக்ரா தியானம் செய்தபின் பல மாற்றங்களை காணமுடிந்தது. கர்ம தோஷம் நீக்கும் தியானம் மற்றும் பித்ரு தோஷம் நீக்கும் தியானம் மூலம் என்னை ஒரு சக்தி வாய்ந்த பெண்ணாக மாற்றியது. ஆல்ஃபாவிற்கும், குருஜிக்கும் நன்றி!

**அஸ்வதி**

I have done all the Alpha classes. I did Amrut Siddhi about 3 years back. I enjoyed it so much and even today that is my favourite among all Alpha meditations. When I saw that the class is there, I really wanted to sit through it again. Particularly for the music therapy added now. But I am abroad now and cannot do that. However, I am planning to do the meditation again and receive Guruji's blessings. ***Akshaya***

நான் ஆல்ஃபா வகுப்புகள் அனைத்திலும் கலந்து கொண்டுள்ளேன். 3 வருடங்களுக்கு முன் அம்ருத சித்தி வகுப்பிலும் கலந்து கொண்டேன். அந்த வகுப்பை அவ்வளவு அற்புதமாக ரசித்தேன். இன்றும் அது தான் எனக்கு மிகவும் பிடித்த ஆல்ஃபா தியானம். மீண்டும் அந்த வகுப்பு இருப்பது தெரிந்தவுடன் மீண்டும் அதில் அமர வேண்டும் என மனம் விரும்பியது. குறிப்பாக இப்பொழுது சேர்க்கப்பட்ட மியூசிக் தெரபி. ஆனால் நான் வெளிநாட்டில் இருப்பதால் அது சாத்தியமில்லை. இருப்பினும், மீண்டும் அந்த தியானத்தை செய்து குருஜியின் ஆசியை பெற வேண்டும் என எண்ணி இருக்கிறேன். **அக்ஷயா**

Thanks a lot to Guruji for this wonderful Sanjeevani class. I attended yesterday's class with my back pain due to a disk compression. Before the class I suffered with pain during house hold works. But, today wow, I am quite comfortable in my activities, my family members are feeling joy with this difference. Besides, now I feel more confident about my health. Actually, I had planned to quit my job due to unbearable back pain. But, Guruji saved my life. Pranams to Srimatha! **Alpha Siddha**

சஞ்சீவனி வகுப்பிற்காக குருஜிக்கு மிக்க நன்றி. நேற்று அந்த வகுப்பில் கலந்து கொண்ட பொழுது முதுகு வலியுடன் சென்றேன். வகுப்பிற்கு முன்னால் வீட்டு வேலைகளை செய்யும் பொழுது மிகவும் சிரமப்பட்டேன். ஆனால் இன்று எந்த வலியும் இன்றி சௌகரியமாக இருக்கிறேன். என் குடும்பத்தினர் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள். இப்பொழுது எனது உடல் நலத்தை பற்றி மிகுந்த நம்பிக்கையுடன் இருக்கிறேன். உண்மையில் தாங்க முடியாத வலியால் எனது வேலையை விட்டு விடலாம் என்று இருந்தேன். ஆனால் குருஜி எனது வாழ்வை காப்பாற்றி விட்டார். நன்றி குருஜி! **ஆல்ஃபா சித்தர்**

My pranams to Guruji and Alpha siddhas. I attended Aishwaryam class (19.05.2019) yesterday . My many misconceptions about money and hurdles which are stopping the flow of money was clarified by guruji in simple terms. That is the speciality of guruji. Simple techniques and Aishwaryam meditation was very pleasant journey . I released all blocks which are stopping within me for easy flow of money. Which was just simply superb. The music therapy was just a soothing experience. In total Aishwaryam meditation was a bundle of abundance of clean and clear flow of energetic experience. Thank you Guruji for Aishwaryam meditation. ***Chitra Ramesh***

குருஜிக்கு என் பணிவான வணக்கங்கள். நான் நேற்று (19.05.2019) ஐஸ்வர்யம் வகுப்பில் கலந்துகொண்டேன். என் மனதில் பணத்தைப் பற்றிய தவறான கருத்தையும், பணத்தை பெறவிடாமல் தடுக்கும் இடையூறுகளை எப்படி களைவது என்பதைப் பற்றி குருஜி மிக எளிய முறையில் விளக்கினார். குருஜியின் தனித்தன்மையினால் தான் இது நடந்தது. எளிய வழிமுறைகளும், ஐஸ்வர்யம் தியானமும் ஒரு இனிய அனுபவத்தை அளித்தது. பணம் என்னிடம் தங்காமல் இருப்பதற்கான தடைகளை நீக்கி பண வரவை அதிகரிக்க உதவியது. ஆல்ஃபா மியுசிக் தெரபி உண்மையிலேயே இனிமையான அனுபவமாகும். மொத்தத்தில் ஐஸ்வர்யம் வகுப்பு செல்வ வளத்தை அதிகரிப்பதோடு, அதில் நமக்கு தெளிவும், தெம்பும் அளிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டிருந்தது. குருஜிக்கு நன்றி!

**சித்ரா ரமேஷ்**

*AMP is on Facebook & WhatsApp! Connect with us to receive latest updates on upcoming events, useful articles, & share alpha experiences with fellow alpha siddhas. Not connected yet? Send us a whatsapp message on **+919884555173** to get connected*

AMP பேஸ்புக் மற்றும் வாட்ஸ்அப் குழுக்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. இதன் மூலம் சுலபமாக நாம் தொடர்பு கொள்ளவும் முக்கியமான செய்திகளை பகிரவும் முடியும். நீங்கள் ஏதேனும் குழுவில் இல்லாவிட்டால், உங்கள் மொபைல் நம்பரிலிருந்து **+919884555173** என்ற நம்பருக்கு ஒரு வாட்ஸ்அப் செய்தி அனுப்பினால் நீங்கள் வாட்ஸ்அப் குழுவில் இணைக்கப்படுவீர்கள்.

**ANNOUNCEMENT**

**'KELAI MANAME'**

GURUJI'S PROGRAM ON POTHIGAI TV !

7.15 am Monday to Friday

You can also watch from mobile app **'DD POTHIGAI LIVE'**

---

அறிவிப்பு

'கேளாய் மனமே'

பொதிகை டிவியில் குருஜியின் நிகழ்ச்சி!

காலை 7.15 மணிக்கு திங்கள் முதல் வெள்ளி வரை

மொபைல் ஆப் **'DD POTHIGAI LIVE'** மூலமும் காணலாம்.

**ALPHA MIND POWER - MOBILE APP**

Download the app and register. You can make advance payment for class through mobile app **ALPHA MIND POWER**

**ஆல்ஃபா மைண்ட் பவர் - மொபைல் ஆப்**

**ALPHA MIND POWER** மொபைல் ஆப் மூலமாக வகுப்பிற்கு முன் பணம் செலுத்தலாம்.

# WORKSHOP SHEDULE

| CITY | WORKSHOP | DATE | DAY | TIME | VENUE |
|---|---|---|---|---|---|
| Tirunelveli (Tamil) | **SANJEEVANI**<br>**AISHWARYAM** | 01/06/2019<br>02/06/2019 | Sat<br>Sun | 9am to 5pm<br>9am to 5pm | Hotel RR INN,<br>Madurai Road, Junction,Tirunelveli. |
| Chennai (Tamil) | **CELL GLOW - KARMA DOSHAM**<br>**AMRUT SIDDHI** | 22/06/2019<br>23/06/2019 | Sat<br>Sun | 9am to 5pm<br>9am to 5pm | Hotel Residency Towers,<br>Pondy Bazaar, T. Nagar, Chennai. |
| Salem (Tamil) | **CELL GLOW - KARMA DOSHAM**<br>**ANUBANDHAM** | 29/06/2019<br>30/06/2019 | Sat<br>Sun | 9am to 5pm<br>9am to 5pm | Hotel Grand Estancia,<br>349/3,Bangalore By-Pass Road, Salem |
| Delhi (English) | **CELL GLOW - KARMA DOSHAM**<br>**ANUBANDHAM** | 06/07/2019<br>07/07/2019 | Sat<br>Sun | 9am to 5pm<br>9am to 5pm | The Lalit, Barakhamba Avenue,<br>Connaught Place,New Delhi. |
| Coimbatore (Tamil) | **SANJEEVANI**<br>**ALPHA LEVEL-1** | 20/07/2019<br>21/07/2019 | Sat<br>Sun | 9am to 5pm<br>9am to 5pm | Hotel Grand Regent,<br>708, Avinashi Road, Coimbatore |
| Bangalore (English) | **KUNDALINI MAHASHAKTHI**<br>**ALPHA LEVEL-1** | 27/07/2019<br>28/07/2019 | Sat<br>Sun | 9am to 5pm<br>9am to 5pm | Hotel IV Sanctum,<br>No.33, 5th Main, Sheshadri Road,<br>Near Anand Rao Circle, Bangalore |
| Trichy (Tamil) | **SRIVIDYA**<br>**ALPHA LEVEL-1** | 03/08/2019<br>04/08/2019 | Sat<br>Sun | 9am to 5pm<br>9am to 5pm | Hotel Breeze Residency,<br>McDonalds Road, Trichy |

*Printed & Published for*

ALPHA MIND POWER™ "Power of the Subconscious Mind"

***Dr. Vijayalakshmi Panthaiyan***
***ALPHA MIND POWER***
*No.4, Abusali Street, Saligramam,*
*Chennai - 600093. INDIA*
*Phone: 044-23760007*
*Mobile:9841402000, 9841272146*
*E-Mail: amp@alphamindpower.net*
*Website: www.alphamindpower.net*

***PRINTED MATERIAL***